RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s631

# அகநானூற்றில் பழக்கவழக்கத் தொன்மம்

**தா. முத்துராமன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, இராஜா நந்திவர்மன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தொள்ளார்-604406. தமிழ்நாடு, இந்தியா.

# The Myth of Habituation in the Akananuru

**D. Muthuraman [a, *]**

[a] Department of Tamil, King Nandhivarman College of Arts and Science, Thellar-604406, Tamil Nadu, India

* Corresponding Author: rdmuthu123@gmail.com

Received: 14-10-2021
Revised: 02-05-2022
Accepted: 14-05-2022
Published: 30-07-2022

**ABSTRACT**

The society of the Sangam age is an excellent cultural base. Customary practices represent the way of life of the Tamils two thousand years ago. The special customs and traditions found in society are called "cultures." All our ancient Tamil pieces of literature extol the cultural aspects of our forefathers. Akananuru is the repository that contains all the life, history, beliefs, and customs of the people of the Sangam age. Akananuru is an expression of myth. It is known that there were types of marriage where the man and the woman were married without the consent of the parents and with the consent of the parents in the marriage system. It is special that they got married on a good day. Young boys built sand houses and played ball games. They cheered and enjoyed playing Kuravai Koothu (an entertaining dance of females) and Thunangai Koothu (a religious dance of females). Tunangai Koothu was unique in that it was exclusively for women. Trades were divided based on the land. Apart from these, it can be known that there were many castes such as potters, carpenters, and paraiyars. Trading was one of our customs. It can be seen that they excelled not only in domestic trade but also in foreign trade.

**Keywords:** Agananuru, Beliefs, Sangam Age, Kuravai Koothu

## முன்னுரை

சமுதாயத்தில் காணப்படும் சிறப்புப் பெற்ற பழக்க வழக்கங்களும் மரபுகளும் பண்பாடுஎனப்படுகிறது. நம்முடைய பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் நம் முன்னோர்களின் பண்பாட்டுக் கூறுகளைப் பறைசாற்றி நிற்கின்றன. சங்க கால மக்களின் வாழ்வு, வரலாறு, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் என அனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ள கருவூலம் அகநானூறு ஆகும். இந்த அகநானூற்றில் திருமணமுறைகள், விருந்தோம்பல், விளையாட்டு போன்ற பழக்க வழக்கங்களை பற்றி இக்கட்டுரையின் மூலம் ஆராயப்படுகிறது.

தொன்மம் என்பது பழமையாகும், அதாவது பழங்கால மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றியதாகும். “பழக்கம் என்ற சொல் பழகுதல் அல்லது பயிற்சியாதல் என்ற பெயரில் பயன் படுத்தப்படுகிறது. பழக்கத்தில் தொடர்ந்த நிலையே வழக்கமாகும். வழக்கம் சமூகம் சார்ந்த ஒன்றாகும். தனிமனிதன் ஒருவன் பழகிப்போன முறையில் திரும்பத் திரும்பச் செய்து வரும் ஒரு குறிப்பிட்ட செயலை பல மனிதர் ஒன்றாகச் சேர்ந்து செய்கின்றபொழுது அது வழக்கமாகிவிடுகிறது. அதாவது

பழக்கம் என்பது தனிமனிதனைச் சார்ந்த தொடக்க நிலை எனவும் வழக்கம் சமுதாயம் சார்ந்த தொடக்க நிலை எனவும் கூறலாம்" (Gandhi, 1998).

"பழக்க வழக்கங்கள் என்பன பண்பாட்டுக்கூறுகள். வழக்கம் ஆங்கிலத்தில் கஷ்டம் என்றும் பழக்கம் என்பது ஆங்கிலத்தில் ஹேபிட் என்றும் அழைக்கப் பெறுகிறது. தமிழில் இணைத்துக் கூறுவது போல பழக்கவழக்கங்களை ஆங்கிலத்தில் பழக்கவழக்கம் ஆகியவை ஒரு பண்பாட்டுப் பரப்பிற்குள் கூட இடத்திற்கு இடம் மாறுபடும் தன்மையது" (Baktavatchala Bharathi, 1999).

## திருமண முறைகள்

திருமணம் ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்காக சமுதாயத்தில் ஏற்படுத்தபட்ட ஒரு முறையாகும். திருமணத்தினால் சில பொறுப்புகளையும் கடமைகளையும் ஏற்க வேண்டிய சூழல் உருவாகிறது. சங்கப் பாடல்களில் திருமணம் பற்றியச் செய்தியானது அதிகமாக சொல்லப்படாவிடினும் சில இடங்களில் சொல்லப்பட்டுள்ளது. இவற்றை நோக்கும் பொழுது தமிழருக்குரிய திருமண முறையானது எவ்வாறு இருந்தது என்பதை அறியமுடிகிறது. பண்டையக் காலத்தில் வதுவை, மன்றல், மணம் என திருமணத்தைக் குறித்துள்ளனர்.

திருமணத்தின் தோற்றம் பற்றிச் சுட்டும் தொல்காப்பியர், பண்டைத் தமிழர்கள் திருமணம் இன்றியே இல்வாழ்க்கையில் ஈடுபட்டனர். பின்னர் இச்செயற்பாட்டில் பொய்யும் வழுவும் மிகுதிப்படவே அதனைக் களைதற் பொருட்டு முன்னோர் சில விதிமுறைகளை ஏற்படுத்தினர் என்பதை,

"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (Sanmugam pillai, 2008)

என்று வட நாட்டாரின் எண்வகை மரபுகளைத் தமிழரின் திருமண முறைகளாகத் தொல்காப்பியர் சுட்டுகிறார் (Sanmugam pillai, 2008).

சங்க காலத்தில் மணம் எனப்படும் பெண் வீட்டில் உழைத்துத் திருமணம் செய்யும் வழக்கம் இருந்ததாகத் தெரிகிறது. இதனை,

"அசையினள் இருந்த ஆய்தொடிக் குறுமகள்
நலம்சால் விழுப்பொருள் கலம் நிறை கொடுப்பினும்
பெறல் அருங்குரையள் ஆயின் அறம் தெரிந்து
நாம்உறை தேஎம் மரூஉப்பெயர்ந்து அவனொடு
இருநீர்ச் சேர்ப்பின் உப்புடன் உழந்தும்
பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்
படுத்தனம், பணிந்தனம், அடுத்தஎம் இருப்பின்
தருகுவன் கொல்லோ தானே - விரிதிரைக்"

என விவரித்துக் கூறுகிறது (Jeyabal, 2004).

திங்கள் உரோகிணியோடு கூடிய நாள் திருமணத்திற்குரிய சிறந்த நாளாகக் கருதப்பட்டது. வீட்டிற்கு முன் வரிசையாகக் கால்களை நட்டும் பந்தலிட்டனர். பந்தலின் கீழ்ப் புதுமணல் பரப்பினர். மனை விளக்கு ஏற்றி மாலைகளைத் தொங்கவிட்டனர். இடையறாது பெருஞ்சோறு அளித்தனர்.

"கனை இருள் அகன்ற கவின்பெறு காலை
கோள்கால் நீங்கிய கொடு வெண்திங்கள்
கேடு இல் விழுப்புகழ் நாள் தலைவந்தென,

உச்சிக் குடத்தர், புத்தகல் மண்டையர்,

பொது செய் கம்பலை முதுசெம் பெண்டிர்"

மணம் செய்து வைக்கும் ஆரவாரமுடைய முதிய மங்கள மகளிர், தலையில் நிறை நீர்க் குடத்தினைச் சுமந்தவராய் கைகளில் கலத்தினை ஏந்தியவராய் ஒன்று கூடினர் என்று கூறுவதிலிருந்து திருமண முறையைக் கூறுவதை காணலாம் (Jeyabal, 2004).

## விளையாட்டு

வாழ்க்கையே ஒரு போராட்டமாக இருந்த மனிதனுக்கு அதுவே பல படிப்பினைகளைக் கற்றுத்தந்தது. அந்த அனுபவம் அவனுக்கு இயற்கையைப் புரிந்து கொள்ளவும் எதிர்க்கவும் சக்தியைத் தந்தது. எனவே அவனுடைய தற்காப்புக்காகத் தாண்டினான், ஓடினான், நீந்தினான், மரமேறினான், கண்விழித்தான், போராடினான். நாடோடி வாழ்க்கை வாழ்ந்தவன் நிலைத்த வாழ்க்கைக்கு வந்தடைந்த போது அவன் பெற்ற பயிற்சி அவனது வீரத்தை புலப்படுத்த வகை செய்தது. வீரத்தோடு மன மகிழ்ச்சியும் இணைய விளையாட்டுக்கள் தோன்றின. அந்த விளையாட்டு வீரத்தை வளர்க்க பயத்தை போக்க நம்பிக்கையை வளர்க்க நண்பர்களை வளர்க்க பொழுதுப்போக்கை ஏற்படுத்த எனப்பல நிலைகளில் விளையாட்டுகள் தோன்றின.

தொல்காப்பியத்தில்,

"செல்வம் புலனே விளையாட்டென்று

அல்லல் நீத்த உவகை நான்கே"

என இன்பம் தருவதே விளையாட்டின் நோக்கம் என்பது தெரிகிறது (Sanmugam pillai, 2008). சங்க காலத்தில் காணப்படும் விளையாட்டுகளில் பெரும்பாலானவை இன்பத்திற்கு ஊறு விளைவிக்காத விளையாட்டாகவே இருந்துள்ளன என்பது சிறப்புக்குரியதாகும்.

சிறுவர்களுக்கு மணல் வீடுகட்டி விளையாடுதலும் அதனைச் சிதைத்து விளையாடுதலும் மிகவும் பிடித்தமானதாகும். பிள்ளைப் பருவத்தில் சிதைத்தல் என்று ஒரு பருவத்திற்கு பெயர் சூட்டியுள்ளனர். இந்த விளையாட்டைப் பற்றி அகநானூறு அழகாக எடுத்துக்காட்டுகிறது.

"தொடலை ஆயமொடு கடல் உடன் ஆடியும்

சிற்றில் இழைத்தும் சிறு சோறு குவைஇயும்

வருந்திய வருத்தம் தீர, யாம் சிறிது

இருந்தனமாக எய்த வந்து

தடமென் பணைத்தோள் மட நல்லீரே!

எல்லும் எல்லின்று, அசைவுமிக உடையேன்"

என்று கூறுகிறது. ஒரு நாள் தோழியர் கூட்டத்தோடு நாங்கள் குளித்தும் கடற்சோலையில் சிறுவீடு கட்டிச் சிறுசோறு சமைத்தும் விளையாடினோம். அப்போது எங்களிடம் வந்த ஒருவன் நல்லோரே பகல் போய்விட்டதால் தளர்ச்சியடைந்துள்ள எனக்கு நீங்கள் உணவளித்து என்னை நும் சிறுகுடியில் தங்க வைத்தால் குறை உண்டாகுமோ என வினவினான். வெட்கப்பட்ட நாங்கள் ஒரு மறைவான இடத்திற்கு ஓடிப்போய் மெல்லிய குரலில் இழிந்த மீனால் ஆன உணவு நுமக்கு ஏற்றதன்று என்று மண் விளையாட்டு விளையாண்டனர் என்பதை அறியமுடிகிறது (Jeyabal, 2004).

பந்து விளையாடல் என்பது இருபாலருக்கும் உரியது என்று அகநானூறு கூறுகிறது.

"நோகோ யானே, நோதகும் உள்ளம்

அம்தீம் கிளவி ஆயமொடு கெழீகி,

பந்து வழிப் படர்குவள் ஆயினும் நொந்துநனி

வெம்பும்மன் அளியார்தானே - இனியே”

என்று இன் சொற்களைப் பேசும் தோழிகளோடு பந்து விளையாடினாள் என்று விளையாட்டைப் பற்றிக் கூறுவதைக் காணமுடிகிறது (Jeyabal, 2004).

“ஆடு பந்து உருட்டுளள் போல ஓடி

அம்சில் ஓதி இவள் உறும்

பஞ்சி மேல் அடி நடை பயிற்றும்மே”

என்று பெண்கள் பந்து விளையாடினர் என்பதை நற்றிணை பாடல் வழி அறியமுடிகிறது (Balasubramanian, 2007).

## கூத்து

கூத்து பழங்காலத் தமிழருக்குச் சிறந்த பொழுது போக்குச் சாதனமாக இருந்தன. இயற்கையில் நிகழ்ந்த மயிலின் ஆடலும் மானின் துள்ளலுமே மனிதன் முதன் முதலில் ஆடற்கலையினைப் படைத்திட தூண்டியிருக்க வேண்டும். கூத்தாட்டினை மயிலின் ஆட்டத்திற்கு ஒப்பிட்டு வரும் குறிப்புகளே தமிழிலக்கியத்தில் பரவலாக உள்ளன.

சங்க இலக்கியங்களில் மிகப் பரவலாகப் பேசப்படும் கூத்து குரவைக் கூத்தாகும். அக்காலச் சமூகத்தில் பாமர மக்களுக்கு உரிய பொழுதுப்போக்கு கூத்தாகக் குரவை இருந்தது தெரிகிறது. குரவை என்பது பலர் கூடி நிகழ்த்தும் கூத்தாகும். அகராதிகள் இதனை மலைநடனம் என்று குறிக்கின்றன. இக்கூத்தினை ஏழு அல்லது ஒன்பது பேர் சேர்ந்து ஆடும் ஆட்டம் என்று உரையாசிரியர்கள் கூறுவர்.

“ஒருங்கு நாமாமுங் குரவையுள்” என்று குரவை குழுநடனம் என்பது தெளிவாகிறது (Visuvanathan, 2004). குரவை பொதுவாக சிறந்த இயற்கைச் சூழ்நிலையிலேயே நிகழ்த்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

“காஞ்சி நீழல் குரவை அயரும்” என்ற பாடலில் மலையுச்சி, மணற்குன்று, மரநிழல் என்று குரவை இயற்கையில் அமைந்த அழகுடைய இடங்களில் நிகழ்த்தப்பட்டது என்பதை அறியமுடிகிறது (Jeyabal, 2004).

துணங்கைக் கூத்து முற்றிலும் மகளிர்க்கே உரியதாக இயங்கியது. துணங்கையில் பங்கு கொண்ட மகளிர் இளமகளிரே. ஆனால் குரவையிலோ முதுமகளிரும் பங்கு கொள்ளமுடிந்தது. இதனை, “மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கும்” என்ற பாடலின் மூலம் அறியலாம். துணங்கை முன்னேற்பாடின்றி நிகழாது என்பார்கள் (Jeyabal, 2004). இதில் ஒருவருக்கொருவர் தொடும் அளவிலேயே ஆடும் முறை இருந்துள்ளது.

## தொழில்

சங்க காலத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நாற்குலமும் சமுதாயத்தின் மேல் தளத்தில் இருந்தனர். ஐவகை நிலத்தினைச் சார்ந்தும் தொழில்களை மேற்கொண்டனர். இவர்களைத்தவிர சமுதாயத்தில் தச்சர், கொல்லர், குயவர், வண்ணார், நெசவாளர், உமணர், பறையர், பாணர், துடியர், கடம்பர் முதலான பல வகுப்பாரும் இவ்வைந்திணை நிலங்களில் வாழ்ந்து தங்கள் தொழில்களை மேற்கொண்டனர்.

உழவுத்தொழில் தொடர்பான பழக்கவழக்கங்கள் அகநானூற்றில் மிகுந்து காணப்படுகின்றன. உழவர்கள் கிணறு வெட்டும் போது குந்தாலி என்னும் கருவியை பயன்படுத்தினர் என்பதை,

“பரல் மண் சுவலை முரண்நிலம் உடைத்த

வல்வாய்க் கணிச்சிகூழ் ஆர் கோவலர்"

என்ற பாடல் மூலம் அறியலாம் (Jeyabal, 2004). விளைச்சல் இல்லாத தரிசு நிலத்தில் கற்களை உடைத்து நீர் ஊற்றுகளை உடைய கிணற்றினைத் தோண்டுவர் என்பதை,

"யடுமணி இனநிரை உணிஇய கோவலர்

விடுநிலம் உடைந்த கலுழகள் கூவல்"

என்ற பாடல் மூலம் அறியலாம் (Jeyabal, 2004).

குறவர்கள் மலையிலும் உச்சி பாறைகளிலும் உள்ள இனிய தேனை எடுக்கும் தொழிலினை மேற்கொண்டிருந்தனர் என்பதை,

"அறை உறுதீம் குறவர் அனுப்ப"

"தேம்பிழி நறவினர் குறவர் முன்றில்"

என்ற பாடலிலும் தேன் எடுத்தல் மேற்கொண்டதாக அறியமுடிகிறது (Jeyabal, 2004).

## வணிகம்

சங்க கால மக்கள் ஒரு நிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைப் பிற நிலத்தவர்க்குக் கொடுத்து தமக்குத் தேவையான பொருட்களை மாற்றிக் கொண்டனர். எனவே மாறுதல் என்றாலே வாணிபம் செய்தல் என்று பொருள் படுவதாயிற்று. தமிழகத்தில் நடைபெற்ற வாணிகச் செயற்பாடுகள் அனைத்தும் சங்க இலக்கியத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. உள்நாட்டு வாணிகத்தோடு வெளிநாட்டு வாணிகமும் நடைப் பெற்றதற்கான குறிப்புகள் சங்கப் பாடல்களில் காணப்படுகிறது.

வெண்கல் அமிழ்தம் எனச் சிறப்பிக்கப்பட்ட உப்பைக் கொண்டே சம்பளத்தில் ஒன்றான அளம் என்று நிலை பெற்றுள்ளது. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பது பழமொழி, இதை உணவுப் பொருளாகப் பயன்படுத்தும் வழக்கம் சங்க காலத்தில் இருந்துள்ளது. எனவே இங்கு உப்பு உற்பத்தி மேலோங்கி இருந்துள்ளது என்பதை,

"பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்

இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த

வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி"

என பரதவ மக்கள் மீன்பிடி தொழிலோடு உப்பினையும் விளைவித்தனர். அவ்வுப்பினை உப்பு வணிகர்கள் பெற்று அதன் விலையைக் கூறிக்கொண்டே கூட்ட கூட்டமாக குன்றுகளைக் கடந்து சென்றனர் என்பதை அறியமுடிகிறது (Jeyabal, 2004).

தமிழகத்தில் பிற நாட்டவரையும் கவரும் வகையில் பல பொருட்கள் கிடைத்தன. அவற்றுள் முத்து, பவளம், அகில், வெண்துகில் சங்கு முதலியன குறிப்பிடத்தக்கவை.

"யவனர் தந்த வினைமாண் நன்கலம்

பொன்னொடு வந்து கறியொடு பெயரும்

வளம்கெழு முசிறி ஆர்ப்புஎழ வளைஇ"

என்று குறிப்பிடுவதிலிருந்து யவனர்கள் நல்ல தொழில் மாண்புடைய மரக்கலத்திலே பொன்னோடு வந்து மிளகொடு திரும்பிப் போகும் நல்ல வளங்கெழுமிய முசிறித் துறைமுகத்தில் யவனர் வந்து பண்ட மாற்று முறையில் வாணிகம் செய்ததை அறியமுடிகிறது (Jeyabal, 2004).

## முடிவுரை

அகநானூறு தொன்மங்களின் வெளிப்பாட்டு நூலாகத் திகழ்கிறது. திருமண முறையில் களவு மணம், சேவை மணம் இருந்ததை அறியமுடிகிறது. நல்லநாள் பார்த்து திருமணம் செய்தனர் என்பது சிறப்புக்குரியதாகும். சிறுவர்கள் மணல் வீடு கட்டியும் பந்து விளையாட்டும் விளையாடினர். குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து ஆடி மகிழ்ந்தனர். துணங்கைக் கூத்து மகளிர்க்கு மட்டும் உரியதாக இருந்தது சிறப்புக்குரியதாகும். நிலத்தின் அடிப்படையில் தொழில்கள் பிரிக்கப்பட்டிருந்தன. இவைத்தவிர குயவர், தச்சர், பறையர் என பலசாதிப்பிரிவுகள் இருந்ததை அறியமுடிகிறது. வாணிபம் செய்வது என்பது நம் பழக்கவழக்கங்களில் ஒன்றாக இருந்தது. உள்நாட்டு வாணிகம் மட்டுமல்லாமல் வெளிநாட்டு வாணிபத்திலும் சிறந்து விளங்கினர் என்பதை அறியமுடிகிறது.

## References

Balasubramanian, K.V. (2007) Natrinai (Moolamum Uraiyum), New Century Book House, Chennai, India.

Baktavatchala Bharathi, (2011) Panpattu Uraiyadal, Adaiyalam Publications, Chennai, India.

Gandhi, K. (1980) Tamilar Palakavalangalum Nambikaikalum, International Institute of Tamil Studies, Chennai, India.

Jeyabal, R. (2004) Agananooru (Mulamun Uraium), New Century Book House, Chennai, India.

Sanmugam pillai, M. (2008) Tolkappiyam, Mulai nilaiyam, Chennai, India.

Visuvanathan, A. (2004) Kalithogai (Mulamun Uraium), New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License